بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 23/10/2020 அன்று இலண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ ـ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ ـ بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝١ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝٢ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝٣ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝٤ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝٥ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝٦ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ۬ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝٧

இன்று நான் ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் என்ற சஹாபியைப் பற்றி குறிப்பிடுவேன். தந்தையார் பெயர் ஜபல் பின் அம்ர். ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் மிகவும் வெண்ணிறமானவர்களாக இருந்தார். மிகவும் அழகிய முகமும், மின்னுகின்ற பற்களும், அழகிய கண்களையும் உடையவர். அவர் தமது சமுதாயத்தின் இளைஞர்களில் மிகவும் அழகிய இளைஞராக இருந்தார்கள். மிகவும் வள்ளலாகவும் இருந்தார்கள்.

அபூ நுயைம் அறிவிக்கிறார்: ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் அவர்கள் அன்ஸார் இளைஞர்களில் மிகவும் கருணை, வெட்கம், கொடையுள்ளம் கொண்டவராக இருந்தார்கள்.

ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் இரண்டாவது பைஅத்தே அக்பாவில் 70 அன்ஸாருடன் சேர்ந்து பைஅத் செய்தவர்கள் ஆவார். இஸ்லாத்தை ஒப்புக் கொள்ளும் போது அவருடைய வயது 18 ஆக இருந்தது. **ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் பத்ர், உஹது, அகழ் மற்றும் பிறகு நடந்த எல்லாப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் சேர்ந்து கலந்து கொண்டார்கள். பத்ர் போரில் கலந்து கொள்ளும்போது அவருக்கு வயது 20 அல்லது 21 ஆக இருந்தது.** இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட பிறகு முஆஸ் பின் ஜபல் அவர்கள் பனூ சலமாவின் இளைஞர்களுடன் சேர்ந்து பனூ சலமாவின் சிலைகளை உடைத்தார்கள்.

மக்கா வெற்றிக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹுனைன் பக்கம் சென்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஆஸ் பின் ஜபலை மக்காவில் விட்டுச் சென்றார்கள். அவர்கள் மக்காவாசிகளுக்கு மார்க்கத்தைக் கற்றுக் கொடுப்பதற்காக விட்டுச் சென்றார்கள். அவர்களுக்கு திருக்குர் ஆன் ஓதக் கற்றுக் கொடுப்பதற்காக அவ்வாறு செய்தார்கள். ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் தபூக் போரில் முழுமையாக பங்கு பெற்றார்கள்.

கதாதா அறிவிக்கிறார்கள்: நான் ஹஸ்ரத் அனஸ் (ரலி) கூறக் கேட்டேன். **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் நான்கு பேர் திருக்குர்ஆனை ஒன்று திரட்டினார்கள். அவர்கள் அனைவரும் அன்ஸாராக இருந்தனர். ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல், ஹஸ்ரத் உபை பின் கஅப், ஹஸ்ரத் ஸைத் பின் ஸாபித், ஹஸ்ரத் அபூ ஸைத்.**

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) மூலம் அறிவிக்கப்படுகிறது: நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறக் கேட்டேன். நான்கு பேரிடம் திருக்குர் ஆன் கற்றுக் கொள்ளுங்கள். இப்னு மஸ்ஊது (ரலி), அபூ ஹுஸைபாவின் அடிமை ஸாலிம் (ரலி), உபை பின் கஅப் (ரலி), முஆஸ் பின் ஜபல் (ரலி) ஆவர்.

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது. **ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனது உம்மத்தில் எல்லாரையும் விட அதிகமாக ஹலால், ஹராம் (ஆகுமானது, ஆகாதது) அறிந்தவர் முஆஸ் பின் ஜபல் (ரலி) ஆவார்கள்.**

முஆஸ் பின் ஜபல் இடமிருந்து அறிவிக்கப்படுகிறது. **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரது கைகளைப் பற்றியவாறு, முஆஸே! நான் உன்னிடம் அன்பு கொள்கிறேன் என்று கூறினார்கள்.** முஆஸ், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனது தாயும் தந்தையும் உங்களுக்கு அர்ப்பணமாகட்டும். நானும் உங்கள் மீது அன்பு கொள்கிறேன் என்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: முஆஸே! உன்னிடம் கவனமூட்டிக் கூற விரும்புகிறேன். ஒவ்வொரு தொழுகைக்குப் பிறகும் இவ்வாறு ஓதாமல் விட்டு விடாதே! அந்த துஆ இதுவாகும். اَللّٰهُمَّ اَعِنِّى عَلٰى ذِكْرِكَ وَشُكْرِكَ وَحُسْنِ عِبَادَتِكَ எனது அல்லாஹ்வே! உன்னை திக்ர் செய்வதற்காகவும், உனக்கு நன்றி செலுத்துவதற்காகவும், உன்னை அழகிய முறையில் வணங்குவதற்காகவும் எனக்கு உதவி செய்வாயாக.

ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் இடமிருந்து அறிவிக்கப்படுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: சொர்க்கத்தின் வாசல்களுள் ஒரு வாசலைப் பற்றிக் கூறவா? ஹஸ்ரத் முஆஸ், கண்டிப்பாக கூறுங்கள் என்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'லா ஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹ்' ஓதி வாரும் என்றார்கள்.

**ஹஸ்ரத் முஆஸ் இடமிருந்து அறிவிக்கப்படுகிறது. அவர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து மிகச் சிறந்த ஈமான் பற்றி கேட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "மிகச் சிறந்த ஈமான் என்பது, அல்லாஹ்வுக்காக நேசம் செலுத்துங்கள். அல்லாஹ்வுக்காகவே வெறுப்பு காட்டுங்கள். உங்கள் நாவை அல்லாஹ்வின் திக்ரில் திளைத்திருக்கச் செய்யுங்கள்."**

ஹஸ்ரத் முஆஸ், 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! மேலும் என்ன?' என்று கேட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "**நீ உமக்காக விரும்புவதை மற்றவருக்காகவும் விரும்புங்கள். எதனை உமக்காக விரும்ப மாட்டீரோ அதனை பிறருக்காகவும் விரும்பாதீர்கள்.**"

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் இடமிருந்து அறிவிக்கப்படுகிறது: ஹஸ்ரத் முஆஸ், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் சேர்ந்து தொழுவார். பிறகு தமது வட்டாரத்திற்குச் சென்று தமது மக்களுக்கு தொழுகை நடத்துவார். ஒருநாள் அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இஷா தொழுதார். பிறகு தமது மக்களிடம் வந்து அவர்களுக்கு இமாமத் செய்தார். அவர் சூரா பகரா ஓத ஆரம்பித்தார். உடனே ஒருவர் பிரிந்து போய் விட்டார். தனியாக சென்று தொழுது விட்டுச் சென்று விட்டார். உடனே மக்கள், இன்ன மனிதரே! நீர் நயவஞ்சகர் ஆகி விட்டீரா? என்று கேட்டார்கள்.

அம்மனிதர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார். அனைத்து விஷயங்களையும் எடுத்துரைத்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஆஸிடம், முஆஸே! நீ மக்களை சோதனையில் இடுவீரா? மக்களை ஏன் சிரமத்தில் ஆழ்த்துகிறீர்? நீர் வஷ்ஷம்ஸி வழுஹாஹா, வல்லைலி இஸா யக் ஷா, ஸப்பிஹிஸ்ம ரப்பிகல் அஃலா போன்ற சிறிய சூராக்களை ஓதுங்கள் என்று கூறினார்கள்.

**பொதுவான வழிகாட்டல் என்னவென்றால், நீண்ட சூராக்களை ஜமாஅத் தொழுகையில் ஓதக் கூடாது. ஏனெனில் பல்வேறு தரப்பட்ட மக்கள் இருப்பர். சிலர் முதியவராக இருப்பர். நோயாளிகள் இருப்பர். வேலை செய்பவர்களும் இருப்பர்.**

ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் கூறினார்கள்: ஒருமுறை நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஒட்டகத்தின் பின்னால் அமர்ந்திருந்தேன். அன்னார் என்னிடம், முஆஸே! என்று அழைத்தார்கள். நான், அருகில்தான் இருக்கிறேன். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இது என் நற்பேறாகும் என்றேன். சிறிது நேரம் கழித்து அன்னார் மீண்டும் முஆஸே! என்று அழைத்தார்கள். பிறகு நான் மீண்டும், அருகில்தான் உள்ளேன். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இது எனது நற்பேறாகும் என்றேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீண்டும் சிறிது நேரம் கழித்து, முஆஸே! என்று அழைத்தார்கள். பிறகு நான் மீண்டும், அருகில்தான் உள்ளேன். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இது எனது

நற்பேறாகும் என்றேன். பிறகு அன்னார், அல்லாஹ்வுக்கு அடியார்கள் மீது என்ன உரிமை இருக்கிறது என்பது உமக்குத் தெரியுமா? என்று கேட்டார்கள். அல்லாஹ்வும் அவனது தூதருமே நன்றாக அறிவார்கள் என்று நான் கூறினேன். அல்லாஹ்விடம், அடியார்கள் மீதுள்ள உரிமை என்னவென்றால், அவர்கள் அவனுக்கே வணக்கம் செய்ய வேண்டும். அல்லாஹ்வுக்கு வேறு எதனையும் இணையாக்கக் கூடாது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். சிறிது நேரம் கழித்து, முஆஸ் பின் ஜபலே! என்று அழைத்தார்கள். பிறகு நான் மீண்டும், அருகில்தான் உள்ளேன். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இது எனது நற்பேறாகும் என்றேன்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அடியார்கள் மீது அல்லாஹ்வுக்குரிய கடமை என்ன என்பது உமக்குத் தெரியுமா? என்று கேட்டார்கள். அல்லாஹ்வும் அவனது தூதருமே அறிவார்கள் என்று கூறினேன். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அந்த அடியார்களை தண்டிக்காமல் இருப்பதாகும் என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் அறிவிக்கிறார்கள்: நான் ஒரு பயணத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தேன். அப்போது நான், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்னை சொர்க்கத்தில் சேர்க்கக்கூடிய, என்னை நெருப்பிலிருந்து அகற்றக்கூடிய ஒரு செயலைக் கூறுங்கள் என்று கேட்டேன். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீர் பெரிய ஒரு விஷயத்தைக் கேட்டுள்ளீர். ஆம்; இது ஒருவருக்கு மிகவும் எளிது. அல்லாஹ் எவருக்கு எளிதாக்கினானோ அவருக்கு மிகவும் எளிதாகும் என்று கூறினார்கள். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அல்லாஹ்வை இபாதத் செய்யுங்கள். அவனுக்கு எதனையும் இணையாக்காதீர்கள். தொழுகையை நிலைநாட்டுங்கள். ஸக்காத் கொடுங்கள். ரமலானில் நோன்பு வையுங்கள். பைத்துல்லாஹ்வை ஹஜ் செய்யுங்கள் என்று கூறினார்கள்.**

**பிறகு கூறினார்கள்: நன்மையின் வாசல் பற்றி கூற வேண்டாமா? நோன்பு கேடயமாகும்; தண்ணீர் நெருப்பை அணைப்பது போன்று சதகா பாவங்களை அணைத்து விடுகிறது; மேலும் நடு இரவில் தொழுவது ஆகியவையாகும்.** அதாவது, தஹஜ்ஜுத் தொழுகை.

பிறகு அன்னார், **அதன் தூண்கள் மற்றும் உயரிய நிலைமைகளைக் குறித்து கூறவா? என்று கூறிவிட்டு, அது ஜிஹாது ஆகும் என்று கூறினார்கள். பிறகு, உமக்கு எல்லாவற்றின் அடிப்படையான விஷயத்தைக் கூறவா? அதனைச் சுற்றியே அனைத்து காரியங்களும் சுற்றுகின்றன என்று கேட்டார்கள். நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்று நான் கூறினேன்.**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது நாவைப் பிடித்துக் காட்டி இதனை தடுத்து வையுங்கள் என்று கூறினார்கள். உடனே நான், அன்னாரிடம் அல்லாஹ்வின் நபியே! இதன் மூலமாக நாம் பேசும் விஷயம் குறித்தும் கேள்வி கேட்கப்படுமா? என்றேன்.**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உமக்கு நன்மை உண்டாகட்டும்! முஆஸே! மனிதனின் முகம் நரகத்தில் வீழ்த்தாது; நாவு நரகத்தில் வீழ்த்தி விடும்.**

ஹஸ்ரத் கஅப் பின் மாலிக் கூறினார்கள்: **முஆஸ் பின் ஜபல் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்திலும் ஹஸ்ரத் அபூபக்ரின் காலத்திலும் மதீனாவில் தீர்ப்பளிப்பவராக இருந்தார்.**

ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல், ஹஸ்ரத் அபூபக்ருடைய காலத்தில் சிரியாக சென்று விட்டார்கள். அங்கு வாழ்ந்து வந்தார்கள். ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் சிரியாவுக்கு புறப்பட்டு சென்ற போது, ஹஸ்ரத் உமர் அவர்கள் கூறினார்கள்: மதீனா மற்றும் மதீனாவாசிகளுக்கு ஃபிக்ஹா (மார்க்கச் சட்டங்கள்) மற்றும் எந்த விவகாரங்களில் இவர் மார்க்க தீர்ப்பு கொடுத்து வந்தார்களோ அவற்றில் மக்களை இப்போது தேவையுடையவர்களாக்கி விட்டார்கள்.

ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் இரவில் தஹஜ்ஜுத் தொழுதால் இவ்வாறு துஆ செய்வார்கள். ‘‘அல்லாஹ்வே! கண்கள் தூங்கி விடுகின்றன. நட்சத்திரங்கள் மின்னுகின்றன. நீ உயிருள்ளவனும், நிலைத்திருக்கச் செய்பவனும் ஆவாய். அல்லாஹ்வே! சொர்க்கத்திற்காக எனது துடிப்பு மிகவும் குறைவாக உள்ளது. நெருப்பிலிருந்து ஓடுவதிலும் எனது நிலை மிகவும் பலவீனமாக உள்ளது. அல்லாஹ்வே! உம்மிடத்தில் எனக்காக நேர்வழியை வைப்பாயாக. மறுமையில் அதனை என்னிடம் கொடுப்பாயாக. நிச்சயமாக நீ வாக்குறுதி மீறுபவனல்லன்.’’

எத்தகைய பயம், அச்சத்தின் நிலை!

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், முஆஸ் பின் ஜபல் அவர்களிடம் கூறினார்கள்: ‘‘அல்லாஹ்வைத் தவிர வேறு வணக்கத்திற்குரியவன் இல்லை என்றும், ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் ரஸூல் ஆவார்கள் என்றும் எவர் தனது உள்ளத்தின் உண்மையைக் கொண்டு சாட்சி கூறுவாரோ, அவருக்கு அல்லாஹ் நெருப்பை ஹராம் ஆக்கி விடுவான்.’’ உடனே அவர், யா ரஸூலல்லாஹ்! இது குறித்து நான் மக்களுக்கு அறிவிக்கட்டுமா? மக்கள் மகிழ்ச்சி அடைவார்கள்' என்றார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘‘பிறகு மக்கள் அதனை மட்டும் சார்ந்து விடுவார்கள். வாயால் கூறி விட்டோம்; வேறு நன்மை தேவையில்லை என்று இருந்து விடுவார்கள். எனவே மக்களிடம் கூற வேண்டாம்’’ என்றார்கள். ஹஸ்ரத் முஆஸ் அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டலை முழுமையாக பேணி நடந்தார். மேலும் முஆஸ் மரண வேளையில் இதனை கூறினார்கள். அதாவது மிக முக்கிய விஷயத்தை பிறரிடம் கொண்டு சேர்க்காமல் விட்டதற்காக அவர் விசாரணைக்கு ஆளாகி விடக் கூடாது என்பதற்காகவும், உமது ஞானத்தில் ஒரு விஷயம் வந்தது. அதை அடுத்தவரிடம் கூறி விட்டுச் செல்லவில்லையே என்று அல்லாஹ் கேட்டு விடக் கூடாதே என்பதற்காகவும் கூறினார்கள்.

ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தபூக் உடைய நீரூற்றை சென்றடையுமாறு எங்களுக்கு கட்டளையிட்டார்கள். நீரூற்றின் தண்ணீரைத் ஒரு போதும் தொட வேண்டாம் என்றார்கள். நீரூற்றில் ஊற்று மிகவும் குறைவாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அங்கு வந்தடைந்தார்கள். அந்த நீரூற்றிலிருந்து ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் தண்ணீர் எடுக்கப்பட்டது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது கையை அதில் கழுவினார்கள். முகம் கழுவினார்கள். பிறகு அந்த தண்ணீரை அந்த நீரூற்றிலேயே திரும்பக் கொட்டி விட்டார்கள். அந்த நீரூற்று வேகமாகச் சுரக்க ஆரம்பித்தது. மக்கள் நன்றாகக் குடித்தார்கள். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், முஆஸே! உமக்கு வாழ்நாள் நீளமாக இருந்தால் இந்த இடம் தோப்புகளால் நிரம்பியதாக இருக்கும் என்பதை நீர் பார்ப்பீர் என்று கூறினார்கள்.

இப்னு வஸா கூறுகிறார். நான் இந்த நீரூற்றைச் சுற்றியுள்ள எல்லா இடத்தையும் கண்டேன். மரங்களும், பசுமையும் எவ்வளவு அதிகமாக இருந்தது என்றால் அன்னாரின் முன்னறிவிப்பின்படி இது கியாமத் வரை தொடர்ந்து நிலைத்திருக்கலாம். இவரைப் பற்றிய குறிப்பின் தொடர்ச்சி வருங்காலத்தில் கூறப்படும். இன்ஷா அல்லாஹ்.

குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் ஓடிசாவின் முபல்லிக் மதிப்பிற்குரிய ஃபர்ஸான் கான் சாஹிப், மலேஷியாவின் உள்ளூர் மிஷனரி மதிப்பிற்குரிய அப்துல்லாஹ் மோஸிகோ சாஹிப், காதியானின் முஅல்லிம் மதிப்பிற்குரிய அப்துல் வாஹித் சாஹிப் ஆகியோரைப் பற்றிய நற்குறிப்பை எடுத்துக் கூறினார்கள். ஜுமுஆ தொழுகைக்கு பிறகு இந்த மர்ஹூம்களின் ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பதாக அறிவிப்பு செய்தார்கள்.

*(தமிழாக்கம்: முஅல்லிம் எம். நிஸாமுத்தீன்)*